**திரப்பனே பிரதேச சபை**
**அநுராதபுர மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 21 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரப்பனே பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை நிதிக்கூற்றுக்கள் வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) புறநெகும திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டில் சபை வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட பலநோக்குக் கட்டடத்தின் செலவு மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா. 42,505,310 இருந்த போதும் அது நிதிக்கூற்றுக்களில் ரூபா. 45,000,000 ஆக காட்டப்பட்டிருந்தமையால் காணி மற்றும் கட்டடங்களின் பெறுமதி ரூபா. 2,494,690 இனால் கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) புறநெகும திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டில் நிர்மாணிக்கப்பட்டு சபைக்கு கையளிக்கப்பட்டுள்ள உடற்சுகாதார நிலையத்தின் பெறுமதியான ரூபா. 3,199,398 நிதிக்கூற்றுக்களில் ரூபா. 5,000,000 என காட்டப்பட்டதனால் காணி மற்றும் கட்டடங்களின் பெறுமதி ரூபா. 1,800,602 இனால் கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) புறநெகும திட்டத்தின் மூலம் சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா. 3,593,985 பெறுமதியான நிலையான சொத்துக்கள் கணக்கீடு செய்யப்படாதிருந்தமையினால் நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதன வருமானத்திற்கு பங்களிப்புச் செய்யும் கணக்கு அத் தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டியிருந்த வியாபார நிலைய மற்றும் வாடகைக் கணக்கின் மீதி ரூபா 1,437,135 ஆக இருக்க வேண்டியிருந்த போதும் அப்பெறுமதி ரூபா 1,422,035 என குறிப்பிடப்பட்டிருந்ததன் காரணமாக அறவிடப்பட வேண்டிய வாடகைக் கணக்கின் மீதி ரூபா. 15,100 இனால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் ஏனைய வருமானங்கள் ரூபா. 804,994 ஆகவிருந்த போதும் வருமானச் செலவினக் கணக்கில் அது ரூபா. 782,523 எனக் கணக்கீடு செய்யப்படாதிருந்தமையினால் ஆண்டின் வருமானம் ரூபா. 22,471 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) திவிநெகும அபிவிருத்தித் திணைக்களத்தினால் 2014 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா. 138,393 பெறுமதியான 125 கல்வனைஸ் குழாய்கள் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

காணி மற்றும் கட்டிட அட்டவணையின் மீதிகள் மற்றும் பேரேட்டுக் கணக்கு மீதிகளுக்கு இடையே ரூபா 17,614,579 தொகையான இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது.

**1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

சில வருடங்களுக்கு முன்பிருந்து முன்கொண்டு வரப்படுகின்ற மொத்தத் தொகை ரூபா 540,249 ஆகிய பெற வேண்டிய கணக்கு மீதிகள் 09 மற்றும் மொத்தம் ரூபா 1,256,037 ஆகிய செலுத்தப்பட வேண்டிய கணக்கு மீதிகளை 04 மீளாய்வாண்டினுள் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படாததுடன் அத்தொகைகளின் காலப்பாய்வு மற்றும் மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

**1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாத காரணத்தால் ரூபா 122,654,261 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

**1.3.5 இணக்கமிண்மைகள்**

**1.3.5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டம் 177 ஆம் பிரிவு | சபையின் சேவை புரியும் தற்காலிக மற்றும் அமைய ஊழியர்களுக்காக பணிக்கொடை கொடுப்பனவிற்காக உத்தேச திட்டமொன்றை தாபிப்பதற்கு உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி | |
| (i) விதி 5.11 | சபைக்குச் சொந்தமான வழியில் காசு மற்றும் ஏனைய பெறுமதியான பொருட்கள் தொடர்பாக முறையான காப்புறுதி மேவுகையொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) விதி 33 | வீதவரி கொடுப்பனவை தவிர்ப்பு செய்யும் நபர்கள் தொடர்பாக பட்டியலொன்றும் ஆதனங்களை தடைசெய்யும் பிடியாணை ஒவ்வொரு காலாண்டிலும் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | |
|---|---|---|
| (iii) | விதி 217 மற்றும் 218 | சபைக்குச் சொந்தமான சகல காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக பீஎஸ் 46 இன் பிரகாரம் பதிவேடொன்று பேணப்படாமல் இருந்ததுடன் சகல காணிகள் மற்றும் கட்டிடங்கள் ஒவ்வொரு ஆண்டிலும் பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2002 நவெம்பர் 28 ஆம் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றரிக்கை | மென்பொருள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று பேணப்படவில்லை. |

**02. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டெழும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 913,037 ஆக இருந்ததுடன், அதற்கு நேமாறாக முன்னைய ஆண்டின் சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,456,686ஆகும்.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டியலிடப்பட்ட வருமானம். சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2017சனவரி 01 இல் ஆரம்ப மீதி | 2017 இல் பட்டியலிடப்பட்ட வருமானம் | 2017இல் சேகரிக்கப்பட்ட வருமானம் | | 2017திசெம்பர் 31 இல் நிலுவை வருமானம் |
|---|---|---|---|---|---|
| | பெறுமதி | பெறுமதி | 2017.01.01 நிலுவையில் பெறுமதி | 2017பட்டியலிடப்பட்ட தொகையில் பெறுமதி | பெறுமதி |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி | 134,369 | 245,358 | 8,182 | 138,458 | 233,087 |
| கடை வாடகை | 739,546 | 645,600 | - | - | - |
| | 68,730 | 75,330 | 66,937 | 40,233 | 1,422,035 |
| குழாய்க் கிணறு கட்டணங்கள் | 369,300 | 42,800 | 36,800 | 9,200 | 366,100 |
| இறைச்சிக் கடை | 182,917 | 847,400 | 500 | 847,400 | 182,146 |
| மொத்தம் | **1,494,862** | **1, 856,488** | **112,419** | **1,035,291** | **2,203,638** |

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 1,494,862 தொகையான மொத்த நிலுவை வருமானத்தில் 7.5 சதவீதமானரூபா 112,419 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

### 2.2.2 வீத வரி

மீளாய்வாண்டில் வீத வரி மற்றும் வரி ரூபா. 245,358 பட்டியலிடப்படுத்தப்பட்டிருந்த போதும் வருட இறுதியில் பட்டியலிடப்படுத்தப்பட்ட வருமானத்தில் 94 வீதத்திற்குச் சமமான ரூபா. 233,087 அறவிடப்பட வேண்டிய வீத வரி காணப்பட்டது. அந்நிலுவை வீதிவரியை அறவிடுவதற்காக பிரதேச சபைச் சட்டத்தின் 158 பிரிவின் பிரகாரம் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கடை வாடகை

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த குத்தகை தொகை ரூபா 1,442,035 ஆக இருந்ததுடன், 2018 யூலை 20 ஆந் திகதி வரை அதில் ரூபா 420,295 தொகை அறவிடப்பட்டிருந்தது. ரூபா 1,021,740 ஆன நிலுவை வாடகையை அறவிடுவதற்காக 1987 இன் பிரதேச சபைச் சட்டத்தின் 159(1) பிரிவின் பிரகாரம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 618,476 ஆக இருந்ததுடன் 2018 யூலை 20 ஆந் திகதி வரை அதில் ரூபா 277,090 தொகை அறவிடப்பட்டிருந்தது.

### 2.2.5 ஏனைய வருமானம்

சபை அதிகாரப்பிரதேசத்தில் காணப்படும் சுற்றுலா அபிவிருத்தி சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள 02 ஹொட்டெல்களில் இருந்து 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 149(ஈ) பிரிவின் பிரகாரம் வருமான அறிக்கைகளை பெற்றுக்கொண்டு வருடாந்த விற்பனை புரள்வின் மீது அறவிடப்படும் 1 சதவீத வரியை .அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 03. செயற்பாட்டு வினைத்திறனின்மை

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், மக்கள் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பான வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

#### (அ) உப விதிகள்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 03 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்ட விடயங்களை நிறைவேற்றுவதற்காக பிரதேச சபை சட்டத்தின் 122 ஆம் பிரிவின் பிரகாரம் உப விதிகள் பிறப்பிக்கப்பட்டு உரிய அதிகாரங்கள் ஸ்தாபிக்கப்பட வேண்டிய போதிலும் 22 பிரதான விடயங்களை உப விதிகள் பிறப்பித்தல் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

சபையினால் நிறைவேற்ற வேண்டிய விடயங்களுக்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) சூழல் தொடர்பான பிரச்சினைகள்**

---

சபையினால் சேகரிக்கப்படும் குப்பைகளில் உக்காத பொருட்கள் பிளிசரு திட்டத்திற்கு அருகில் திறந்த வெளியிலே ஒன்று சேர்க்கப்பட்டிருந்தது. மழை காலங்களில் அக்கழிவுகளில் நீர் சேர்வதாலும் குப்பைகள் சூழலுடன் கலப்பதாலும் சுகாதாரம் தொடர்பான பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிடுவதும் உக்காத பொருட்களை சூழலில் வைத்து எரிப்பதன் காரணமாக நச்சு வாயுக்கள் வெளியாகி சூழல் தாக்கங்கள் ஏற்படக் கூடுமெனவும் அவதானிக்கப்பட்டது.

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்**

---

நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை அறிந்து இருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ செயற்றினனின்மை**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) புறநெகும திட்டத்தின் மூலம் சபைக்கு அன்பளிப்பாகக் கிடைத்த ரூபா. 42,505,310 பெறுமதியான பல்நோக்கு கட்டிடம் மற்றும் கேட்போர் கூடம் ஆகியவற்றை வாடகைக்காகக் கொடுப்பதன் மூலம் வருமானத்தினை அதிகரித்துக் கொள்வதற்கு சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபை அதிகாரப் பிரதேசத்தினுள் 11 தொலைபேசிக் கோபுரங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் 03 கோபுரங்களுக்கு மாத்திரம் ஆரம்ப கட்டணங்கள் அறவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக 2009 செப்தெம்பர் 17 ஆந் திகதிய 1597/08 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் கட்டணங்களை அறவிடுவதற்கு சபை தவறியிருந்தது.

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் பராமரிக்கப்படுகின்ற 13 காணிகளுடனும் 01 கட்டிடத்துடனும் தொடர்பான உள்ளூராட்சி மன்ற மீளமைப்பு 03 ஆம் இலக்க சுற்றுநிரூபத்தின் 03 ஆம் பந்திற்கு அமைவாக உரிமைப்பத்திரம் மற்றும் வரைபடங்களை பெற்றுக் கொள்ளவும், அக்காணிகளின் எல்லைகளை அடையாளப்படுத்தவும், அவற்றின் பெறுமதியினை மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் 54 இடுகாடுகளுக்கான இடம் ஒதுக்கப்பட்டிருந்த போதும் 2006 நவம்பர் 14 ஆம் திகதிய PL/07/01/53 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற மறுசீரமைப்பு சுற்றுநிரூப இலக்கம் 09 இன் ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைப்புகள் இலக்கம் 7.1 இலிருந்து 7.8 வரையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(இ) சபையினால் முன்னுரிமைப்படுத்தப்பட்ட பாதைப் பராமரிப்புப் பட்டியல் தயாரிக்கப்படாதிருந்ததுடன், 06 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற புனர்நிர்மாண சுற்றுநிரூபத்தின் 03 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைப் பரிந்துரைப்புகளை செயற்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

சபைக்கு சொந்தமான 03 வாகனங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் அவற்றை திருத்தி பயன்பாட்டிற்கு பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ அல்லது திருத்தியமைப்பதற்கு அல்லது கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்காக சபையின் நிர்வாகக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பாதிடப்பட்ட எண்ணிக்கை மற்றும் உள்ளவாறான எண்ணிக்கைக்கு இடையே ஒப்பிட்டுரீதியான கூற்றொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

2015 மார்ச் 18 ஆந் திகதிய 04/2015 ஆம் இலக்க வடமேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரது சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தியின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு**

2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(i) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் மூலம் விநியோகிக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
| --- | --- |
| (அ) வருமான சேகரிப்பு | i. வருமான மதிப்பீடு தயாரிக்கப்படாமை<br>ii. வருமான உத்தியோகத்தர்களின் வேலை மேற்பார்வை செய்யப்படாமை<br>iii. ஆதனங்களை மதிப்பீடு செய்யப்படாமை |
| (ஆ) திட்டமிடல் | கூட்டிணைந்த திட்டம், செயல் நடவடிக்கை திட்டம் மற்றும் பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) நிலையான சொத்துக்கள் | i சொத்துக்கள் முறையாக கணக்கீடு செய்யப்படாமை<br>ii. நாளதுவரையாக கணிப்பீடு மேற்கொள்ளப்படாமை<br>iii. சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை |

| | | |
|---|---|---|
| (ஈ) | திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவம் | உக்காத திண்மக் கழிவுப்பொருட்களை மீள்சுழற்சிக்கு உட்படுத்தாமை. |
| (உ) | பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள் | நீண்டகாலமாக இருந்து வரும் கணக்கு மீதிகளை இனங்கண்டு தீர்வுசெய்யாமை. |
| (ஊ) | உள்ளகக் கணக்காய்வு | உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |